இருக்கிறது. ஏற்கெனவே, அப்படிப்பட்ட நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற சில ஊராட்சி ஒன்றியங்களுக்காவது, இந்த வாகனங்களைப் பாதுகாக்கின்ற வகையிலும், அதுபோன்று இவர்களுடைய அடிப்படையான சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கின்ற வகையிலும் நிதி தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தேவையில்லை என்ற அளவிற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கேள்வி, துணை வினா எழுகிறது. காரணம், அது இருந்துகொண்டு, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு, வாகனங்கள் இருந்தும் அதை வைத்துக்கொள்வதற்கு இடமில்லை என்று சொன்னால், இந்தச் சாதாரண விஷயத்தைக்கூட அரசு நேரிடையாகச் செய்ய வேண்டுமென்பது அந்த அளவு நல்லதல்ல; அதற்குச் செலவிடுகிற தொகைகளை, அவர்களே, பொது நிதியிலிருந்து செலவழிக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமோ, அவ்வாறு செலவழித்ததற்குப் பிறகு உள்ளபடியே பற்றாக்குறை இருந்து, அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், இப்படிப்பட்ட சாதாரண பிரச்சினைகளைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

25—

குளிர்பதனக் கிடங்கு

***32853—திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒசூர் வட்டத்தில் காய்கறி மற்றும் திராட்சை உற்பத்தி அதிகமாக உள்ளதால், குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

2001 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru B. Venkatasamy: Honourable Speaker, Sir, Hosur and Denkanikottai Taluks are producing more vegetables, next to Ooty and they are not in a position to store the potatoes, grapes and other things when the rates are down. From the beginning, I am requesting the Hon. Minister to construct a building with cold storage facility at Hosur. The Uzhavar Sandhai at Hosur is also performing well. I came to understand that it is the best in Tamil Nadu. Lot of vegetables also have to be stored for the next day's sale. May I know from the Honourable Minister whether he would consider construction of atleast one building with cold storage facility in the Uzhavar Sandhai at Hosur, so that [illegible] as well as small farmers could be benefited.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் கிருஷ்ணகிரியில் ஓசூர் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்று தேவை என்று இந்தப் பேரவையின் வாயிலாகவும், நேரில் பார்க்கிறபோதும் அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அரசின் சார்பிலே இதை அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை. இப்போது கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு வேளாண் தொழில் வளர்ச்சிக் கழகமும், சென்னையைச் சேர்ந்த* park foods and exports *என்ற நிறுவனமும் கூட்டு முயற்சியில் 5,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க உத்தேசித்துள்ளன. இதற்கான மொத்த திட்டச் செலவு .790 இலட்சம் ஆகும். இதிலே தேசிய தோட்டக்கலை வாரியம் குளிர்பதனக் கிடங்கு அமைக்க முதலீடு மானியமாக 1 டன் கொள்ளளவிற்கு ரூ. 1,000 மானியம் என்ற விகிதத்தில், அதிகபட்சம், திட்டச் செலவில் 25 விழுக்காடு வழங்கியிருக்கிறது. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் இந்தத் திட்டத்தின்கீழ் தனியார்களை, இப்படிப்பட்ட குளிர்பதனக் கிடங்கு அமைக்க, கொண்டுவருவாரேயானால், இந்த மானியத்தைக் கொடுத்து அமைக்க இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கலாம்.*